**STARTING TIME 11.19 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 6/2025**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assisatant of this court, on 09.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **வளர்மொழி** Husband's Name :

Address :

Age :

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

11. என் கணவர் பாலகிருஷ்ணன் என்னை விட்டு பிரிந்து சென்ற எவ்வளவு காலத்திற்கு பிறகு நான் 2–வது திருமணம் செய்துக் கொண்டேன் என்றால், 2–1/2 வருடத்திற்கு பிறகு 2–ம் திருமணம் செய்துக் கொண்டேன். நான் 2–ம் திருமணம் செய்துக் கொண்ட சமயத்தில், எனது கணவர் பாலகிருஷ்ணன் என்னை விட்டு சென்று இருந்தாலும், அவர் சட்டப்படி இறந்தவராக மாட்டார் என்றால், அவர் எங்கிருந்தார் என்று எனக்கு தெரியாது.

12. எனது முதல் கணவர் பாலகிருஷ்ணன் என்னை விட்டு பிரிந்து சென்ற பிறகு வேடல் கிராமம் பேருந்து நிழற்கூடத்தில் தான் வசித்து வந்தார் என்றால், சரிதான், எந்த பிரச்சனையும் இல்லாமல் தான் விட்டுவிட்டு சென்று அங்கு வசித்து வந்தார்.

13. எனது தாத்தா செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்த போது அதற்கான மூலப்பத்திரத்தை என்னிடம் கொடுத்தார் என்றால், ஒரே ஒரு பத்திரம் இருந்ததால் அதை பெரிய மாமா நரசிம்மனிடம் கொடுத்துவிட்டு அதன் ஜெராக்ஸ் நகலை என்னிடம் கொடுத்தார். பட்டா பாஸ் புத்தகத்தின் அசலையாவது கொடுத்தாரா என்றால், இல்லை, அதையும் நரசிம்மனிடமே கொடுத்தார். அந்த ஜெராக்ஸ் நகலை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

14. எனது தாத்தா ரத்தினவேல் தன்னிச்சையாக என் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்கவில்லை என்றும், உயில் சாசனம் எழுத வேண்டும் என்று அழைத்து சென்று அவரை ஏமாற்றி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால், சரியல்ல. அதனால் தான் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக சொல்லும் சொத்திற்கான பத்திரத்தின் அசல் மற்றும் பட்டாவின் அசலை என்னிடம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

15. என் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு கூட அந்த ஆவணத்தில் உள்ள சொத்துக்களை என் தாத்தா தான் அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல, 2013-ம் ஆண்டில் இருந்து 2020-ம் ஆண்டு வரை நான் தான் அனுபவித்து வந்தேன். 2013-ம் ஆண்டில் இருந்து 2020-ம் ஆண்டு வரையான அடங்கல் பதிவேட்டை பார்த்தால் அந்த சொத்துக்களை யார் அனுபவித்து வந்தார் என்று தெரியும் என்றால், சரிதான். நான் அடங்கல் பதிவேடு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

16. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு முதலில் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 178/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த வழக்கில் உள்ள சொத்துக்களில் எந்த தேதியில் குணசேகரன் மற்றும் நரசிம்மன் அத்துமீறி அக்கிரமிப்பு செய்தார்கள் என

சொல்லியுள்ளேன் என்றால், தேதி நினைவில் இல்லை, ஆனால் வருடம் 2020 ஆகும்.

17. நான் தாக்கல் செய்த தாவாவில் எந்த தேதியில் தாவா சொத்துக்களில் அத்துமீறி அக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். ஆனால் 15.06.2017 மற்றும் 17.12.2017 தேதிகளில் எனது அனுபவத்தை தடை செய்தார்கள் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அது சம்மந்தமாக நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால், சரிதான். எனது அப்பா மற்றும் அம்மாவும் தனித்தனியாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். அந்த புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியும்.

18. நான் வேலூர் மாவட்ட நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் ஒரு புகார் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். அந்த புகாரை யார், யார் மீது கொடுத்தேன் என்றால், ரத்தினவேல், நரசிம்மன் மற்றும் குணசேகரன் ஆகியோர்கள் மீது கொடுத்தேன். என்ன சொல்லி அந்த புகாரை கொடுத்தேன் என்றால், நிலத்தை அளந்து பட்டா மாற்ற சொல்லி மனு கொடுத்து அளக்க வந்த போது அளக்கவிடவே இல்லை, அதனால் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் நகலை தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியும்.

19. எனது தாத்தா அவரது முழுமனசம்மதத்துடன் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. அவ்வாறு அவர் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால், அவர் மீது புகார் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல, அவர் தான் என்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

20. எனது தாத்தா என் மீது தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள விவரம்

தெரியுமா என்றால், தெரியும், அவரை வற்புறுத்தி அந்த வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளார்கள். என் தாத்தா தாக்கல் செய்துள்ள வழக்குரையில் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் பேரில் நடந்த விசாரணையின் போது தான், உயில் எழுதுவதற்கு பதிலாக செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்ற விவரம் தெரிய வந்தது என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான், அதையும் வற்புறுத்தி சொல்ல வைத்தார்கள்.

21. என் தாத்தா உயிருடன் இருந்த வரை, அவரை வற்புறுத்தி வழக்கை தாக்கல் செய்ய வைத்தார்கள் என்பதை அவரிடமிருந்து எழுதி வாங்கினேனா என்றால், இல்லை, அவரிடம் என்னை பேசவேவிடவில்லை. அது போல் என் தாத்தாவிடம் என்னை பேசவேவிடவில்லை என்ற விவரத்தை நான் தாக்கல் செய்த வழக்கிலும், என் மீது தாக்கல் செய்த வழக்கில் நான் தாக்கல் செய்த பதிலுரையிலும் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. என் தாத்தா உயிருடன் இருந்த வரை தாவா சொத்துக்கள் அவரது அனுபவத்தில் தான் இருந்தது என்றும், நான் அனுபவித்திற்கே வரவில்லை என்றால், சரியல்ல.

22. என் தாத்தா காலமான பிறகு அவர் எழுதி வைத்த உயிலின்படி தாவா சொத்துக்களை பாலகிருஷ்ணன் தான் அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்துகளுக்கான அசல் ஆவணங்கள் அனைத்தும் என் தாத்தா தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அந்த ஆவணங்களின் அசலை எனது பெரியமாமாவிடம் கொடுத்திருந்தார், அதனால் அவர் தாக்கல் செய்தார்.

23. வேடல் கிராமத்தில் உள்ள முனுசாமி ரெட்டியின் மகன் சாமிநாதன் என்ற நபரை தெரியுமா என்றால், தெரியாது. கண்ணப்ப ரெட்டியின் மகன் ஆறுமுகம் என்பவரை தெரியுமா என்றால், சாமிநாதன் மற்றும் ஆறுமுகம் என்பவர்களை தெரியும், ஆனால் அவர்களின் தகப்பனார் பெயர் தெரியவில்லை. அவர்களுக்கும் எனக்கும் தகராறு எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

24. எனது தாத்தா எழுதியதாக சொல்லி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள உயில் சாசனத்தை நான் பார்த்தேனா என்றால், இல்லை. நான் உயில் சாசனத்தை பார்த்துள்ளேன் என்றும், வழக்கிற்காக வேண்டி பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. அந்த உயில் சாசனத்தை திரு. K.M. முரளி என்ற வழக்கறிஞர் எழுதியுள்ளார் என்றும், அதை மோசடியாக எழுத வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றால், சொத்துக்கள் பற்றிய விவரம் தெரிந்திருந்தால் அவர் அது போன்ற உயில் சாசனத்தை எழுதிக் கொடுத்திருக்கமாட்டார்.

25. நான் உயிலை படித்து பார்தேன் என சொன்னால், அது சம்மந்தமான கேள்விக்கு பதில் சொல்ல வரும் என்பதால் உயிலை படித்து பார்க்கவில்லை என சொல்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் தற்போது யார் அனுபவித்தில் உள்ளார்கள் என்றால், நான் அங்கு போனாவே பிரச்சனை செய்கிறார்கள், அதனால் யார் அனுபவித்து வருகிறார்கள் என்று தெரியாது. எத்தனை ஆண்டுகளாக யாருடைய அனுபவத்தில் உள்ளது என தெரியவில்லை என சொல்கிறேன் என்றால், 2020-ம் ஆண்டில் இருந்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று தெரியவில்லை. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்குமூலமே தவறானது என்றால், சரியல்ல.

26. உயில்படி என் தாத்தா இறந்த பிறகு தாவா சொத்துக்களை பாலகிருஷ்ணன் தான் அனுபவித்து வருகிறார் என்றால், அது பற்றி தெரியவில்லை. பாலகிருஷ்ணன் பெயரில் எழுதிய உயில் உண்மையானது, தன்னிச்சையாக எழுதப்பட்டது என்றால், சரியல்ல, 5 நபர்கள் பெயரில் ஒரே நாளில் தனித்தனியாக 5 செட்டில்மெண்ட் பத்திரங்களை எனது தாத்தா எழுதிக் கொடுத்தார், அதனால் அவர் உயில் எதையும் எழுதிக் கொடுக்கவே இல்லை.

27. என் பெயருக்கு என் தாத்தா எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம்

நடைமுறைக்கே வரவில்லை என்றும், நான் எந்த காலத்திலும் தாவா சொத்துக்களை அனுபவித்ததே இல்லை என்றால், சரியல்ல. எனவே, என் தாத்தா ரத்தினவேல் தாக்கல் செய்து, அவரது காலத்திற்கு பிறகு அவர் எழுதி வைத்த உயிலின்படி பாலகிருஷ்ணன் நடத்தி வரும் அசல் வழக்கு எண் 6/2025–ல் கேட்டுள்ள பரிகாரங்களை வழங்கி தீர்ப்பாக வேண்டும் என்றும், நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 25/2025–ஐ தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 12.01. P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.09 16:33:15 +0530